# ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோவில்

## திருக்கோணமலை



# விசுவரூப தரிசனம்

ஐப்பசி மாத கந்தசஷ்டி (5ம் நாள் மாலை)

01.11.2019 - வெள்ளிக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தணி சுப்பிரமணிய சுவாமி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவமயம்

| | | |
|---|---|---|
| தலம் | – | திருவலிவலம் |
| சுவாமி | – | மனத்துணை நாதர் (இருதய கமல நாதேஸ்வரர்) |
| தேவி | – | மாழையங்கண்ணி |
| பாடல் | – | தேவாரம் 1ம் திருமுறை |
| பண் | – | வியாழக்குறிஞ்சி |
| இராகம் | – | சௌராஷ்டிரம் |
| பாடியவர் | – | சம்பந்தர் |
| இடம் | – | திருவாரூரில் இருந்து தென்கிழக்கில் 10km தூரத்தில் உள்ளது. |
| வேறு பெயர் | – | கொன்றை வனம், வில்வவனம், ஏகசக்ரபுரம் காரணமா முனிவர், வலியன் என்னும் கரிக்குருவி பூசித்த தலம். |
| தீர்த்தம் | – | ஆதவ (சூரிய) தீர்த்தம் |

(உதவி பாடல் பெற்ற ஸ்தலங்கள் – 276 திருத்தலங்கள்)

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உரு உமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம் உறை இறையே.

பெரியபுராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாக்கும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமை இலாக்கலை ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் – அந்நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சியப்ப சிவாச்சாரியாரால் அருளிச் செய்யப்பட்ட கந்தபுராணத்தில் சிவசுப்பிரமணிய சுவாமியின் விஸ்வரூப தரிசனம் திருப்பெருவடிவம் – பாதாதி கேசம்

ஆதியும் அந்தமும் இல்லாத ஞான வள்ளல் ஆகிய பரமேஸ்வரரின் குமாரராகிய ஆறுமுகசுவாமி ஆனவர் முப்பத்து முக்கோடி தேவர்களும் துன்பம், துயரம், அச்சம் நீங்கி ஆன்ம சந்தோசமும் அவர்களது சொர்க்க லோகமும் மீண்டும் கிடைக்கத்தக்கதாக சூரபன்மனின் சகோதரர்கள், பிள்ளைகள், அசுர சைனியங்கள் எல்லாவற்றையும் சங்காரம் செய்கிறார்.

நாலாம் நாள் – அக்கினி முகாசுரன் வதையும்

ஐந்தாம் நாள் – பானுகோபன் வதையும்

ஆறாம் நாள் – சிங்கமுகாசுரன் வதையும் நடந்து ஏழாம் நாள் முதல் பத்தாம் நாள் வரை சூரபன்மாவுடன் யுத்தம் நடந்தது.

பத்தாம் நாள் யுத்தகளத்தில் சகலவற்றையும் இழந்து நிற்கும் சூரபன்மாவுக்கு பூர்வ ஜென்ம தபோபலத்தை அளிக்க வந்த ஞானசக்தி சொரூபராகிய கந்தசுவாமியார் அஃதுவசுத்தக் கிரியையாய் புறத்தே யுத்தத் தொழில் போன்ற தீட்சையைச் செய்து அவனைத் தனிக்கச் செய்து விஸ்வரூப தரிசனத்தை கொடுக்கத் திருவுளம் செய்து சட்சு தீட்சை செய்து சஞ்சித கன்மாவை அழித்து வாசதீட்சையும் செய்தார்.

(உசாத்துணை நூல் – கந்தபுராணம் (மூலம்)
திருப்பனந்தாள்ஆதீனம் (1993)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராணத்தில் சிவசுப்பிரமணிய சுவாமியின் விஸ்வரூப தரிசனம் (பாதாதி – கேசம்) கச்சியப்ப சிவாச்சாரியாரால் அருளிச் செய்யப்பட்டது.

உள்ளடி வரைகள் யாவும்
ஒண்புறம் அடியில் நீத்தம்
உள்உகிர் விரல்கள் முற்றும்
வான்உரு மேறு நாள்கோள்
என்அருள் பரடு தன்னில்
இரும்புனற்கு இறைவன் சோமன்
நள்இருள் அனைய மேனி
நிருதியோ: அரக்கர் நண்ண. 1

பொருள் – திருவடிகளின் நடுப்பகுதியில் பாதாள உலகங்களும், பூலோகமும், மலைகளும், அமைந்திருக்கவும் ஒளி பொருந்திய திருவடிகளின் வெளிப்பக்கத்தில் எல்லா நீர்நிலைகளும் பொருந்தியிருக்கவும் சூரிய நகம் பொருந்திய பாத விரல்கள் முழுவதும் ஆகாயத்தில் தோன்றும் இடி முழக்கமும் சூரிய சந்திரர் தவிர்ந்த ஏழு கிரகங்களும் 27 நட்சத்திரங்களும் புகழத்தக்கதான பரடு எனும் உறுப்பிலே மழை நீர்க்குத் தலைவனாகிய வருண பகவானும் பூத சூரியனும் சந்திரனும் குபேரனும் தடித்த இருள் போன்ற மேனியுடைய அட்டதிக்குப் பாலகரில் தென்மேற்குத் திசாதிபதியாகிய நிருதி தேவனும் இராட்சதரும் வீற்றிருக்கவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிதிரள் கணைக்கால் தன்னில்
ஆர்டர் மணிகள் சானு
வடிவமை முழந்தாள் விஞ்சை
வானவர் ஆதி யானோர்
தொடைதனில் மகவான் மைந்தன்
தொடை முதல் நடுவன் காலன்
கடிதடத்து அசுரர் பக்கம்
கடவுளர் யாரும் நிற்ப 2.

பொருள் – அடிகளின் மேல் திரண்ட உறுப்பாகிய கணைக்கால்களிடத்தே முனிவர்களும் சிந்தாமணி முதலான மணிகளும் அமையவும் தட்டையான மலைப்பாக நுனி போன்றதனால் சானு என்னும் பெயர் பெற்ற அழகிய திருமுழந்தாள் இடத்தே வித்தியாதரர் என்று சொல்லப்படும் தேவ ஜாதியாரும் அமைந்து இருக்கவும் திருத்தொண்டர்களிடத்தே இந்திரன் அவன் மகனாகிய சயந்தன் அமர்ந்திருக்கவும் திரு அரையிலே அசுர ஜாதியாரும் பொருந்தி இருக்கவும் விலாப்பக்கங்களில் சகல தேவர்கள் வீற்றிருக்கவும்,

இருப்பினும் நாகர் கோச
எல்லையில் மருந்தே உந்திக்
கருப்படும் உயிர்கள் மார்பில்
கலைகள் முன்நூலில் போதம்
அரும்புஅயில் உரோமத்து அண்டம்
அங்கையில் அகில போகம்
திருப்பெரும் தடந்தோள் வைப்பில்
செங்கண்மால் விரிஞ்சன் மேவ 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் - மூலாதாரம் ஆகிய குதஸ்த்தானத்தால் நாகர் எனப்படும் சர்ப்ப ஜாதியரும் இலிங்க ஸ்தானத்தில் தேவாமிர்தம் வீற்றிருக்கவும் கற்போற்பத்தியில் உள்ள சகல ஜீவ கோடிகள் அமையவும் மார்பினில் சகல சாஸ்திர கலை ஞானங்கள் (64) அமையவும் உபவீதம் எனப்படும். பூணூலிடத்தே ஞானமும் முளைத்துக் காணப்படும் சூரிய உரோம மயிரினில் பிரமாண்டங்களும் திருக்கரங்களில் சகல போகங்களும் அழகிய பெரிய விசாலமான அகன்ற புயங்களில் மகாவிஷ்ணுவும் பிரம்மதேவரும் அமைந்திருக்கவும்,

மெல்இதழ் அனைய செங்கை
விரல்மிசை அணங்கின் நல்லார்
ஒல்ஒலி மணிவாய் வேதம்
பல்இடை எழுத்து நாவில்
பரமஆ கமத்தின் பேதம்
நல்இதழ் மனுவின் விஞ்சை
நாசியில் பவனன் மன்ன 4.

பொருள் - மிருதுவான செங்காந்தழ்ப் பூ இதழ் போன்ற சிவந்த திருக்கரத்தில் சகல போகங்களுடைய தேவஜாதிப் பெண்களும் எல்லா வகையான மந்திர சப்தங்களும் அக்னி தேவதையும் திருக்கழுத்தில் ஒப்பில்லாத அழகிய திருவாயினில் இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதமும் திருநாவின் இடத்தே சிவாகம பேதங்கள் 28 அமையவும் நல் அதரங்களினிடத்தே சப்தகோடி மகா மந்திரங்களும் அமையவும் மூக்கினிடத்தே வாயு பகவானும் பொருந்தி இருக்கவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைகொள் விழிப்பில் சோமன்
கதிரவன் செவியில் திக்கு
திருநுதல் குடிலை வைப்புச்
சென்னியில் பரம ஆன்ம
மரபினில் மேவித் தோன்ற
மாறிலாது இருக்கும் தொல்லை
ஒருதனது உருவம் காட்டி
நின்றாலும் உம்பர் கண்டார். 5.

பொருள் – இயல்பாகவே கிருபை பொழிகின்ற கண்களில் ஞான சந்திரனும் ஞான சூரியனும் காதுகளில் எட்டுத்திக்குகளும் அழகிய நெற்றியில் பிரணவ சொரூபம் பொருந்தித் தோன்றவும் சிரசு என்று சொல்லப்படும் தலையில் பரமாத்மாவாகிய சிவபெருமானும் முறையாகவே பொருந்தி விளங்கவும் மாறுபாடு இன்றி என்றும் நிலைத்திருக்கவும் பழமையான இணையற்ற தனக்கே சொந்தமான இந்த விஸ்வரூபத்தை காட்டி நிற்கும் அந்த சிவ புண்ணிய காலத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களே முதலில் கண்டு தரிசித்தார்கள்.

கோலமா மஞ்ஞை தன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்று இருந்தேன் அந்நாள்
பரிசு இவை உணர்ந்தி லேன்யான்
மால்அயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ. 6.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவமயம்

## அருள்மிகு ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி தேவஸ்தான வருடாந்த நிகழ்வுகள் – 2019 – 2020 (சித்திரை வருடப்பிறப்பு வரை)

| மாதம் | நாள் | கிழமை | நிகழ்ச்சிகள் |
|---|---|---|---|
| மார்கழி | 01.01.2020 | புதன் | ஆங்கில புதுவருஷப்பிறப்பு |
| | 01.01.2020 | புதன் | திருவெம்பாவை ஆரம்பம் |
| | 01.01.2020 | புதன் | விநாயகர் விரத முடிவு |
| | 06.01.2020 | திங்கள் | கார்த்திகை |
| | 10.01.2020 | வெள்ளி | திருவெம்பாவை முடிவு |
| தை | 15.01.2020 | புதன் | தைப்பொங்கல் |
| | 28.01.2020 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| | 03.02.2020 | திங்கள் | கார்த்திகை |
| | 08.02.2020 | சனி | தைப்பூசம் |
| மாசி | 21.02.2020 | வெள்ளி | மஹாசிவராத்திரி |
| | 27.02.2020 | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| | 01.03.2020 | ஞாயிறு | கார்த்திகை |
| பங்குனி | 20.03.2020 | வெள்ளி | கும்பாபிஸேக தினம் (திருவோணம்) |
| | 28.03.2020 | சனி | சக்தி கணபதி சதுர்த்தி விரதம் கார்த்திகை |
| | 06.04.2020 | திங்கள் | பங்குனி உத்தரம் |
| | 13.04.2020 | திங்கள் | இரவு 7.26 மணிக்கு சார்வரி வருஷப் பிறப்பு |
| சித்திரை | 14.04.2020 | செவ்வாய் | சார்வரி வருஷப்பிறப்பு |
| | 25.04.2020 | சனி | கார்த்திகை |
| | 26.04.2020 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| | 07.05.2020 | வியழன் | சித்திரா பூரணை விரதம் சித்திரகுப்த விரதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வைகாசி | 22.05.2020 | வெள்ளி | கார்த்திகை |
| | 26.05.2020 | செவ்வாய் | மஹோற்சவம் கொடியேற்றம் |
| | 26.05.2020 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| | 28.05.2020 | வியாழன் | காலை தண்டாயுதபாணி உற்சவம், மாம்பழத் திருவிழா |
| | 02.06.2020 | செவ்வாய் | சப்பறம் |
| | 03.06.2020 | புதன் | இரதோற்சவம்(தேர்த் திருவிழா) |
| | 04.06.2020 | வியாழன் | வைகாசி விசாகம் காலை தீர்த்தோற்சவம் மாலை கொடியிறக்கம் |
| | 05.06.2020 | வெள்ளி | பூங்காவனம் |
| ஆனி | 18.06.2020 | வியாழன் | கார்த்திகை |
| | 26.06.2020 | புதன் | சதுர்த்தி விரதம் |
| | 28.06.2020 | ஞாயிறு | ஆனி உத்தரம் கந்தபுராணப்படிப்பு ஆரம்பம் |
| | 15.07.2020 | புதன் | கார்த்திகை |
| ஆடி | 20.07.2020 | திங்கள் | ஆடி அமாவாசை விரதம் |
| | 24.07.2020 | வெள்ளி | ஆடிப்பூரம் |
| | 24.07.2020 | வெள்ளி | நாகசதுர்த்தி விரதம் |
| | 06.08.2020 | வியாழன் | இலக்ஷார்ச்சனை ஆரம்பம் |
| | 11.08.2020 | செவ்வாய் | இலக்ஷார்ச்சனை பூர்த்தி |
| | 12.08.2020 | புதன் | ஆடித்திருக் கார்த்திகை |
| ஆவணி | 22.08.2020 | சனி | விநாயக சதுர்த்தி விரதம் |
| | 28.08.2020 | வெள்ளி | ஆவணி மூலம் கந்தபுராண பூர்த்தி |
| | 02.09.2020 | புதன் | ராகு கேது மாற்றம் |
| | 08.09.2020 | செவ்வாய் | கார்த்திகை |
| | 13.09.2020 | ஞாயிறு | நான்காவது ஆவணி ஞாயிறு அமுது வழங்கல் |
| புரட்டாதி | 9.09.2020 | சனி | முதலாவது புரட்டாதிச் சனி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | 20.09.2020 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| | 26.09.2020 | சனி | இரண்டாவது புரட்டாதிச் சனி |
| | 03.10.2020 | சனி | மூன்றாவது புரட்டாதிச் சனி |
| | 05.10.2020 | திங்கள் | கார்த்திகை |
| | 10.10.2020 | சனி | நான்காவது புரட்டாதிச் சனி |
| ஐப்பசி | 17.10.2020 | சனி | நவராத்திரி விரதாரம்பம் |
| | 20.10.2020 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| | 22.10.2020 | வியாழன் | ஸரஸ்வதி பூஜாரம்பம் |
| | 24.10.2020 | சனி | மஹாநவமி, ஸரஸ்வதிபூஜை |
| | 25.10.2020 | ஞாயிறு | விஜயதசமி, வித்தியாரம்பம் |
| | 02.11.2020 | திங்கள் | கார்த்திகை |
| | 14.11.2020 | சனி | தீபாவளி |
| | 15.11.2020 | ஞாயிறு | ஸ்கந்த ஷஷ்டி ஆரம்பம் குரு மாற்றம் |
| கார்த்திகை | 18.11.2020 | புதன் | சதுர்த்தி விரதம் |
| | 19.11.2020 | வியாழன | விஸ்வரூப தரிசனம் |
| | 20.11.2020 | வெள்ளி | காலை சண்முகார்ச்சனை மாலை சூரசங்காரம் |
| | 21.11.2020 | சனி | மாலை சண்முகநாத சுவாமி திருக்கல்யாணம் |
| | 29.11.2020 | ஞாயிறு | திருக்கார்த்திகை குமாராலய தீபம் |
| | 01.12.2020 | செவ்வாய் | விநாயகவிரதாரம்பம் |
| மார்கழி | 18.12.2020 | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| | 20.12.2020 | ஞாயிறு | விநாயகர் விரதமுடிவு |
| | 21.12.2020 | திங்கள் | திருவெம்பாவை ஆரம்பம் |
| | 26.12.2020 | சனி | கார்த்திகை, சனி மாற்றம் |
| | 30.12.2020 | புதன் | திருவெம்பாவை முடிவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தை | 14.01.2021 | வியாழன் | தைப்பொங்கல் |
| | 16.01.2021 | சனி | சதுர்த்தி விரதம் |
| | 23.01.2021 | சனி | கார்த்திகை |
| | 28.01.2021 | வியாழன் | தைப்பூசம் |
| மாசி | 15.02.2021 | திங்கள் | சதுர்த்தி விரதம் |
| | 19.02.2021 | வெள்ளி | கார்த்திகை |
| | 11.03.2021 | வியாழன் | மஹா சிவராத்திரி |
| பங்குனி | 17.03.2021 | புதன் | சதுர்த்தி விரதம் |
| | 18.03.2021 | வியாழன் | கார்த்திகை |
| | 28.03.2021 | ஞாயிறு | பங்குனி உத்தரம் |
| | 06.04.2021 | செவ்வாய் | கும்பாபிஷேக தினம் (திருவோணம்) |



கணித்தவர்
வெ. இரகுநாத ஐயர்
சோதிட பரிபாலன மடம்,
கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தணி

ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படை வீடாக அமைவது திருத்தணி திருக்கோயிலாகும். இந்தியா தமிழ்நாட்டின் திருவள்ளூர் மாவட்டத்தில் மலைப்பகுதியில் திருத்தணிக் கோயில் அமைந்துள்ளது. ஒரு வருடத்தின் 365 நாட்களை குறிக்கும் வண்ணம் 365 படிகளைக் கொண்டுள்ளது.

அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற திருத்தலமாகும். சங்ககால புலவரான நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையில் இக்கோயில் குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன.

மலையடி வாரத்தில் பெரிய திருக்குளமாகிய சரவணப் பொய்கையில் நீராடி முருகப்பெருமானை தரிசிப்பதும், கிரிவலம் வருவதும் மரபு. சித்திரையிலும், மாசியிலும் பிரம்மோற்சவம் நடைபெறும். ஆடிக்கிருத்திகை, தெப்போற்சவம் சிறப்பு வாய்ந்தது. ஆங்கில வருடப்பிறப்பன்று திருப்புகழ் திருப்படி விழா நடைபெறுவது சிறப்பு வாய்ந்ததொன்றாகும்.

சூரபத்மவதம் செய்து தேவர்களை சிறைமீட்டு மகேந்திரபுரியை அழித்து விட்டு வந்த குமரப்பெருமானின் போர்ச்சினம் "செருத்தணி" எனும் திருத்தணியில் வந்து தங்கிய போது தான் முற்றும் தணிந்ததென்று முருகவேளே கூறியதாக கந்தபுராண ஆசிரியர் பாடியுள்ளார்.

திருச்செந்தூரை மனத்தால் கருதித் தொழுவதும் பழனியை வாக்கால் போற்றித் தொழுவதும் திருத்தணிகையை உடம்பால் பணிந்து போற்றுவதும் நலம் என அருணகிரியார் கருதுகின்றார்.
"தணிகைக் குமரனே! உன் தண்டையணிந்து திருவடிகளைச் சூடாத தலையும் நாடாத கண்ணும் தொழாத கையும் பாடாத நாவும் பெற்றிருந்து என்ன பயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமுதிர் சோலை

முருகப்பெருமானின் ஆறாவது படை வீடாக அமைவது "சோலைமலை" எனப்படும் பழமுதிர் சோலையாகும். இத்தலம் மதுரை மாநகரத்தில் இருந்து வடதிசையில் 20 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

அருணகிரிநாதரால் திருப்புகழில் பாடப் பெற்ற தலம் நூபுரகங்கை என்ற சுனையே இத்தலத் தீர்த்தம், நாவல் மரம் தல விருட்சம் ஔவைக்கு முருகன் அருள் புரிந்த தலம் முருகன் சிறுவனாய் வந்து ஔவைப் பிராட்டியாரைச் சோதித்த தலம். பழமுதிர் சோலைக்கு அண்மையில் அழகர் கோயில் உள்ளது. வள்ளி நாயகியை திருமணம் செய்ய விநாயகரை யானையாக வந்து உதவும்படி குமரன் அழைத்த திருத்தலம், ஒருமுகமும் நான்கு திருக்கரங்களுடன் வள்ளி, தேவயானை சமேதராகக் காட்சி தருகிறார்.

இத்தலத்தில் "கந்தசஷ்டி" விழா முக்கியமாகக் கொண்டாடப்படுகின்றது. இதைவிட தைப்பூசம், வைகாசி விசாகம், மாத கிருத்திகை ஆகிய நாட்களிலும் சிறப்பாக அபிஷேக பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் தேனும் திணைமாவும் நைவேத்தியமாக படைக்கப்படும்.

(ஆதாரம் - வீரகேசரி 29.08.2019 வியாழக்கிழமை நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ், தமிழக சுற்றுலா கலைக் களஞ்சியம் - என். தம்பையா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்ச நந்திகள்



இந்திர நந்தி – போகநந்தி
பிரம நந்தி – வேத நந்தி)
அதிகார நந்தி
திரிபுர தகன கால விஸ்ணு நந்தி – திருமால் நந்தி, மால்விடை
பிரளயகால தருமநந்தி

ஆதாரம் – நந்தி பகவான் (குருபரன்)

உலகத்தில் தெய்வீக அதிர்வுகளை அதிகமாக உணரக் கூடிய ஆறு இடங்கள்

- திருக்கோணஸ்வரம்
- கதிர்காமம்
- பத்திரி நாத்
- கேதார நாத்
- அமர நாத்
- மக்கா – மதீனா

Dhull Deep Singh –
(வட இந்திய ஞானி) கூறியதை
ஒரு சொற் பொழிவில். இரா. புவனேஸ்வரன் சொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# This Year Calendar 2020

**January**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

**February**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | |

**March**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**April**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

**May**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**June**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

**July**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

**August**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**September**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

**October**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

**November**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**December**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Holidays - 2020

## Public, Bank, Mercantile & Full Moon Poyadays

| Month | Date | Day | Holiday | |
|---|---|---|---|---|
| January | 10 | Friday | Duruthu Full Moon Poya Day | ✻ † # |
| | 15 | Wednesday | Tamil Thai Pongal Day | ✻ † # |
| February | 04 | Tuesday | National Day | ✻ † # |
| | 08 | Saturday | Nawam Full Moon Poya Day | ✻ † # |
| | 21 | Friday | Maha Sivarathri Day | ✻ † |
| March | 09 | Monday | Madin Full Moon Poya Day | ✻ † # |
| April | 07 | Tuesday | Bak Full Moon Poya Day | ✻ † # |
| | 10 | Friday | Good Friday | ✻ † |
| | 12 | Sunday | Day Prior to Sinhala & Tamil New Year Day | ✻ † # |
| | 13 | Monday | Sinhala & Tamil New Year Day | ✻ † # |
| May | 01 | Friday | May Day | ✻ † # |
| | 07 | Thursday | Vesak Full Moon Poya Day | ✻ † # |
| | 08 | Friday | Day Following Vesak Full Moon Poya Day | ✻ † # |
| | 25 | Monday | Id-Ul-Fitr (Ramazan Festival Day) | ✻ † |
| June | 05 | Friday | Poson Full Moon Poya Day | ✻ † # |
| July | 04 | Saturday | Esala Full Moon Poya Day | ✻ † # |
| August | 01 | Saturday | Id-Ul-Alha(Hadji Festival Day) | ✻ † |
| | 03 | Monday | Nikini Full Moon Poya Day | ✻ † # |
| September | 01 | Tuesday | Binara Full Moon Poya Day | ✻ † # |
| October | 01 | Thursday | Adhi-Vap Full Moon Poya Day | ✻ † # |
| | 30 | Friday | Milad - Un - Nabi (Holy Prophet's B-Day) | ✻ † # |
| | 30 | Friday | Vap Full Moon Poya Day | ✻ † # |
| November | 14 | Saturday | Deepavali Festival Day | ✻ † |
| | 29 | Sunday | Ill Full Moon Poya Day | ✻ † # |
| December | 25 | Friday | Christmas Day | ✻ † # |
| | 29 | Tuesday | Unduvap Full Moon Poya Day | ✻ † # |

✻ Public Holidays † Bank Holidays # Mercantile Holidays

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோலைமலை அருள்மிகு சுப்பிரமணியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org